**ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**

**கோயம்புத்தூர் - 641020**

**தமிழ்த்துறை**

**முதல் பாடத்திட்டக் குழுக் கூட்டம் - 2018-2019**

**நாள்: 28.10.2017**

**பரிந்துரையின் மையக் கருத்து**

1. பண்பாட்டு விழுமியம்
2. ஆன்மீக விழுமியம்
3. இலக்கிய இலக்கண ஆர்வத்தைத் தூண்டல்
4. படைப்பாக்கத் திறன் உண்டாக்குதல்

நான்கு பருவத்திற்குமுரிய பாடத்திட்டங்களை மாற்றியமைக்கப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

1. **தமிழ்த்தாள் I - இக்கால இலக்கியம்**

- புதுக்கவிதை
- சிறுகதை
- குறுங்காவியம்
- மாணவர் திறன் வளர்க்கும் பயன்பாட்டுத் தமிழ்
- இலக்கணப் பயிற்சி (இலக்கிய வரலாற்றுப் பின்னணியில்)

2. **தமிழ்த்தாள் - II - பக்தி இலக்கியம் - சிற்றிலக்கியம்**

- சைவ வைணவ இலக்கியம்
- சமண பௌத்த இலக்கியம்
- கிறித்துவ இசுலாமிய இலக்கியம்
- சிற்றிலக்கியம்
- கட்டுரைகள்

2. **தமிழ்த்தாள் - III - காப்பிய, புராண இலக்கியம்**

- பெருங்காப்பியங்கள்
- சிறுகாப்பியங்கள்
- இதிகாச, புராண இலக்கியம்

- நாடகம்
- தமிழகக் கலை வரலாறு

2. **தமிழ்த்தாள் - IV - சங்க இலக்கியம் - அற இலக்கியம்**

- எட்டுத்தொகை
- பத்துப்பாட்டு
- அற இலக்கியம்
- பொருளிலக்கணம்
- நாவல்

எல்லா அலகுகளும் சம அளவில் அலகுகள் இருத்தல் வேண்டும். வினாக்கள் எல்லாப் பகுதிகளிலும் கேட்கும் அளவில் அமைதல் வேண்டும். பழமைக்கும் புதுமைக்கும் இடம் தருதல் வேண்டும். பெண் எழுத்தாளர்களைச் சேர்க்கலாம்.

ஒரு கவிஞருக்கு அல்லது எழுத்தாளருக்குப் பாடத்திட்டத்தில் ஓரிடம் மட்டும் அளித்தல் நல்லது. இலக்கணப் பகுதிகளில் அடிப்படை இலக்கணம் மட்டும் மாணவர்களுக்குக் கொடுக்கலாம். கலைச்சொல் பயிற்சி இன்றைய கடிதப் போக்குவரத்திற்குப் பயன்படுவதால் அதனையும் பாடத்திட்டத்தில் சேர்க்கலாம். பேச்சுக்கலைப் பயிற்சியை மாணவர்களுக்கு வகுப்பறையில் செய்முறைப் பயிற்சியாகக் கொடுப்பது நல்லது என்பன போன்ற பொதுப் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

இந்தப் பரிந்துரைகளை மனதிற்கொண்டு 2018-2019 ஆம் கல்வியாண்டின் இரண்டாம் பாடத்திட்டக் குழுக்கூட்டத்தில் முழுமையான பாடத்திட்டப் பரிந்துரைகள் நிறைவு செய்யப்படும் என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.